**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, திருவண்ணாமலை**

**முன்னிலை : திருமதி.K. ரேவதி, M.L.,**

**நீதித்துறை நடுவர் எண்–1,**

**திருவண்ணாமலை**

**2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.90/2021**

**CNR NO. TNTM0C–000421–2021**

தமிழ்நாடு அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
வெறையூர் காவல் நிலையம்,
திருவண்ணாமலை.
குற்ற.எண்.12/2021 ......குற்றமுறையிடுபவர்

//எதிர்//

விக்னேஷ், வயது 24/2026,
த/பெ.சுபாஷ்,
நெ.44/B, திருக்கோவிலூர் ரோடு,
அருணகிரிபுரம் 1–வது தெரு,
திருவண்ணாமலை மாவட்டம். ......எதிரி

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No. 814/2020/RG/F1ன் படியும், குற்றவியல் நடைமுறை விதிகள், 2019, விதி 106(4)ன் படியும் வழக்கின் சுருக்கம்**

| வ. எண் | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>வெறையூர் காவல் நிலையம்,<br>திருவண்ணாமலை.<br>குற்ற.எண்.12/2021 |
| 2. | எதிரி | விக்னேஷ், வயது 24/2026,<br>த/பெ.சுபாஷ்,<br>நெ.44/B, திருக்கோவிலூர் ரோடு, |



K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:45:36 +0530

<table>
<tr><td></td><td></td><td colspan="3">அருணகிரிபுரம் 1–வது தெரு,<br>திருவண்ணாமலை மாவட்டம்.</td></tr>
<tr><td>3.</td><td>குற்றம் சாட்டப்பட்டது</td><td colspan="3">எதிரியின் மீது இ.த.ச பிரிவு 392 ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டது.</td></tr>
<tr><td>4.</td><td>குற்றச்சாட்டு வனையப்பட்டது</td><td colspan="3">எதிரியின் மீது இ.த.ச பிரிவு 392 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது.</td></tr>
<tr><td>5.</td><td>சம்பவம் நடந்த நாள்</td><td colspan="3">14.01.2021</td></tr>
<tr><td>6.</td><td>முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">14.01.2021</td></tr>
<tr><td rowspan="2">7.</td><td rowspan="2">எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்</td><td colspan="2">கைது செய்யப்பட்ட நாள்</td><td>பிணையில் சென்ற நாள்</td></tr>
<tr><td colspan="2">15.01.2021</td><td>10.03.2021</td></tr>
<tr><td>8.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 240 ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவப்பட்ட நாள்</td><td colspan="3">11.10.2021</td></tr>
<tr><td>9.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள்</td><td colspan="3">அரசு தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311– ன் கீழ் 06.03.2026 ம் தேதி மனுதாக்கல் செய்யப்பட்டு Cr.M.P.NO.771/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அன்றே அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="2">10.</td><td rowspan="2">வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1<br>அ.சா.2<br>அ.சா.3<br>அ.சா.4</td><td>23.06.2022<br>23.06.2022<br>23.06.2022<br>23.06.2022</td><td>23.06.2022<br>23.06.2022<br>23.06.2022<br>23.06.2022</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.5<br>அ.சா.6<br>அ.சா.7<br>அ.சா.8<br>அ.சா.9<br>அ.சா.10<br>அ.சா.11 | 01.08.2022<br>28.10.2025<br>28.10.2025<br>28.10.2025<br>04.11.2025<br>20.11.2025<br>06.03.2026 | 01.08.2022<br>28.10.2025<br>28.10.2025<br>28.10.2025<br>04.11.2025<br>20.11.2025<br>06.03.2026 |
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 09.03.2026 | | |
| 12. | எதிரியின் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | – | - | |
| 13. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 17.03.2026 | | |
| 14. | தீர்வு | முடிவாக, இவ்வழக்கின் எதிரியின் மீது இ.த.ச பிரிவு 392 ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரி இ.த.ச பிரிவு 392 ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் | | |

K REVATHI
Digitally signed by K REVATHI
Date: 2026.03.17 17:45:51 +0530

| | | |
|---|---|---|
| | | தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் சி.பி.எண்.22/2021 ல் கண்டுள்ள வழக்கு சொத்தான நீலக்கலர் VIVO Cell Phone சா.பொ.1 மற்றும் சி.பி.எண்.21/2021 ல் கண்டுள்ள கரு நீல கலர் INFINIX Cell phone சா.பொ.3 ஆகியவற்றை அதன் உரிமையாளர் இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொள்ள Crmp.No.1028/2021 மற்றும் Crmp.No.1029/2021 ஆகியவற்றில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுநாள் வரை மேற்படி வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் ஜாமின்தாரர்களை முன் நிறுத்தவில்லை. எனவே, வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் கு.வி.மு.ச பிரிவு 452 ன் கீழ் மனு தாக்கல் செய்து வழக்கு சொத்துக்களை பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.<br><br>சி.பி.எண்.21/2021 ல் கண்டுள்ள வழக்கு சொத்தான நீலக்கலர் Samsung |



K REVATHI
Digitally signed by K REVATHI
Date: 2026.03.17 17:45:59 +0530

| | | |
|---|---|---|
| | | Cell Phone சா.பொ.2 மற்றும் சி.பி.எண்.20/2021 ல் கண்டுள்ள வழக்கு சொத்தான TN 10 AH 9480 என்ற பதிவெண் கொண்ட கருப்பு கலர் Pulsar இருசக்கர வாகனம் சா.பொ.4 ஆகியவற்றை அதன் உரிமையாளர்கள் உரிய மனு செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு இரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | சாட்சிகளை ஆஜர்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. |

இந்த வழக்கானது கடந்த 28.06.2021 ஆம் தேதியன்று CC.No.90/2021 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக என் முன்பாக வந்தபோது, குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் திரு.S.வெங்கடபதி, M.L., நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.I.சேகர், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை

K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:46:07 +0530

இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

### 1. இறுதி அறிக்கையின் சுருக்கம்

கடந்த 14.01.2021 ஆம் தேதி 13.00 மணியளவில் வெறையூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆண்டியார்ப்பாளையம் கிராமம், பச்சையம்மன் கோயில் முன்பு பட்டியல் சாட்சி–2 VIVO செல்போனையும், பட்டியல் சாட்சி–3 SAMSUNG செல்போனையும், பட்டியல் சாட்சி–4 INFINIX செல்போனையும் கையில் வைத்துக்கொண்டு நின்று பேசிக்கொண்டிருந்தபோது, அண்டம்பள்ளம் மார்க்கமிருந்து TN 10 AH 9480 PULSAR என்ற இருசக்கர வாகனத்தை இளம்சிறார் சிவக்குமார் என்பவர் ஓட்டிகொண்டும், நடுவில் எதிரியும், கடைசியில் இளம்சிறார் விக்னேஷ் என்பவரையும் உட்கார வைத்துக்கொண்டும் மேற்படி பச்சையம்மன் கோயில் முன்பு பேசிக்காண்டிருந்த சாட்சிகளிடம் கையில் உள்ள செல்போனை பிடுங்கி வருமாறு இளம்சிறார் சிவக்குமார் தெரிவித்ததால் அவருக்கு பின்னால் உட்கார்ந்திருந்த எதிரியும், இளம்சிறார் விக்னேஷ்வரனும் சென்று பட்டியல் சாட்சி–2 வைத்திருந்த VIVO செல்போனையும், பட்டியல் சாட்சி–3 வைத்திருந்த SAMSUNG செல்போனையும், பட்டியல் சாட்சி–4 வைத்திருந்த INFINIX செல்போனையும் பிடுங்கிக்கொண்டு மேற்படி சாட்சிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 392 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமென வெறையூர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:46:14 +0530

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர், எதிரியின் மீது இ.த.ச பிரிவு 392 ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவிய போது எதிரி குற்றச்சாட்டினை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, சாபொ.1 முதல் சா.பொ.4 வரையிலான சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி–6 முதல் 16 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்குறிப்பு செய்ததின் அடிப்படையில் விலக்களிக்கப்பட்டுள்ளனர்.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்.**

**5.1)** புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், தான் ஆண்டியாப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், விவசாயம் செய்து வருகிறேன் என்றும், சாட்சி திலக், பிரவின் குமார் ஆகியோர்களை தெரியும் என்றும், சாட்சி தரணிகுமார் தன்னுடைய மகன் என்றும், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் பகல் சுமார் 1.00 மணியளவில் தங்கள் ஊரில் பச்சையம்மன் கோவிலிடம் தன் மகன் தரணிகுமார் மற்றும் பிரவின் குமார் மற்றும் திலக்


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:46:21 +0530

ஆகிய மூவரும் இருந்த போது இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் தன் மகள் தரணிகுமார், பிரவின் குமார், திலக் ஆகியோருடைய செல்போனை பிடிங்கிகொண்டு சென்று விட்டதாக கொல்லியில் இருந்த போது சொன்னார்கள் என்றும், செல்போன் பறித்து சென்ற நபரை வலசை கிராமத்தில் பிடித்து வைத்திருப்பதாக தகவல் சொன்னார்கள் என்றும், அதன் பிறகு தாங்கள் வெறையூர் காவல் நிலையம் சென்றோம் என்றும், பக்கத்து ஊரில் பிடித்து வைத்திருந்த செல்போன் பறித்து சென்ற நபர்களை காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள் என்றும், தான் காவல் நிலையம் சென்று செல்போன் பறித்த நபர்களை பார்க்கவில்லை என்றும், புகார் மனு அ.சா.ஆ 1 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.2)** அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் ஆண்டியாப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், தான் பத்தாம் வகுப்பு படித்து விட்டு தற்போது 11 ம் வகுப்பு படித்து வருகிறேன் என்றும், சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் நேரத்தில் தான் தன்னுடைய நண்பர்கள், பிரவின் குமார், தரணிகுமார் ஆகியோருடன் தங்கள் ஊர் பச்சையம்மன் கோவிலிடம் இருந்தபோது இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் வந்தார்கள் என்றும், தாங்கள் அங்கு உட்கார்ந்து செல்போனில் கேம் விளையாடி கொண்டிருந்தோம் என்றும், அந்த மூன்று நபர்களில் ஒருவர் தங்கள் மூவரின் செல்போன்களை பிடிங்கி கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும், அந்த மோட்டார் சைக்களின் பதிவு எண் தெரியாது என்றும், செல்போன் பிடிங்கி சென்றவர்களின் முகம் மறந்துவிட்டது என்றும், தன்னுடைய செல்போனை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்டி


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:46:29 +0530

சொல்ல முடியும் என்றும், செல்போனை பறித்து கொண்ட சென்ற பிறகு தாங்கள் கத்தினோம், அப்போது தங்கள் ஊரில் உள்ளோர்கள் போன் செய்து பக்கத்து ஊரில் உள்ளவர்கள் செல்போன் பறித்து சென்றவர்களை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக சொன்னார்கள் என்றும், தாங்கள் காவல் நிலையம் சென்றோம் யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை என்றும், செல்போன் பறித்து சென்ற நபர்களின் இருசக்கர வாகனத்தை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் மறந்துவிட்டது என்றும், நீல கலர் விவோ செல்போன் தன்னுடையது என்றும், அது சா.பொ.1 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.3)** அ.சா.3 தனது சாட்சியத்தில், தான் ஆண்டியாப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், தான் பத்தாம் வகுப்பு படித்து வருகிறேன் என்றும், சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் 1.00 மணியளவில் தான் தன்னுடைய நண்பர்கள், திலக், தரணிகுமார் ஆகியோருடன் தங்கள் ஊர் பச்சையம்மன் கோவிலிடம் இருந்தபோது இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் வந்தார்கள் என்றும், தாங்கள் அங்கு உட்கார்ந்து செல்போனில் கேம் விளையாடி கொண்டிருந்தோம் என்றும், அந்த மூன்று நபர்களில் ஒருவர் தங்கள் மூவரின் செல்போன்களை பிடிங்கி கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும், அந்த மோட்டார் சைக்களின் பதிவு எண் தெரியாது என்றும், செல்போன் பிடிங்கி சென்றவர்களின் முகம் மறந்துவிட்டது என்றும், தன்னுடைய செல்போனை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்டி சொல்ல முடியும் என்றும், செல்போனை பறித்து கொண்டு சென்ற பிறகு தாங்கள்

K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:46:38 +0530

கத்தினோம் என்றும், அப்போது தங்கள் ஊரில் உள்ளோர்கள் போன் செய்து பக்கத்து ஊரில் உள்ளவர்கள் செல்போன் பறித்து சென்றவர்களை பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக சொன்னார்கள் என்றும், தாங்கள் காவல் நிலையம் சென்றோம் யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை என்றும், செல்போன் பறித்து சென்ற நபர்களின் இருசக்கர வாகனத்தை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் மறந்துவிட்டது என்றும், நீல கலர் சாம்சங் செல்போன் தன்னுடையது என்றும், அது சா.பொ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.4)** அ.சா.4 தனது சாட்சியத்தில், தான் ஆண்டியாப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், தான் பத்தாம் வகுப்பு படித்து வருகிறேன் என்றும், சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் 1.00 மணியளவில் தான் தன்னுடைய நண்பர்கள், திலக், பிரவின் குமார் ஆகியோருடன் தங்கள் ஊர் பச்சையம்மன் கோவிலிடம் இருந்தபோது இருசக்கர வாகனத்தில் மூன்று பேர் வந்தார்கள் என்றும், தாங்கள் அங்கு உட்கார்ந்து செல்போனில் கேம் விளையாடி கொண்டிருந்தோம் என்றும், அந்த மூன்று நபர்களில் ஒருவர் தங்கள் மூவரின் செல்போன்களை பிடிங்கி கொண்டு சென்றுவிட்டார் என்றும், அந்த மோட்டார் சைக்களின் பதிவு எண் தெரியாது என்றும், செல்போன் பிடிங்கி சென்றவர்களின் முகம் மறந்துவிட்டது என்றும், தன்னுடைய செல்போனை பார்த்தால் தன்னால் அடையாளம் காட்டி சொல்ல முடியும் என்றும், செல்போனை பறித்து கொண்ட சென்ற பிறகு தாங்கள் கத்தினோம் என்றும், அப்போது தங்கள் ஊரில் உள்ளோர்கள் போன் செய்து பக்கத்து ஊரில் உள்ளவர்கள் செல்போன் பறித்து சென்றவர்களை பிடித்து காவல் நிலையத்தில்


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:46:49 +0530

ஒப்படைத்ததாக சொன்னார்கள் என்றும், தாங்கள் காவல் நிலையம் சென்றோம் யாரையும் அடையாளம் காண்பிக்கவில்லை என்றும், செல்போன் பறித்து சென்ற நபர்களின் இருசக்கர வாகனத்தை பார்த்தால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் மறந்துவிட்டது என்றும், கருநீல கலர் இன்பினிக்ஸ் செல்போன் தன்னுடையது என்றும், அது சா.பொ.3 என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.5)** கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 தனது சாட்சியத்தில், தான் ஆண்டியாப்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், வயதானப்படியால் வீட்டில் உள்ளேன் என்றும், அ.சா.1 குமாரசாமி, அ.சா.2 திலக் ஆகியோர் தன் பேரன்கள் என்றும், அ.சா.3 மற்றும் அ.சா.4 ஐ தெரியாது என்றும், ஆஜர் 1ம் எதிரி விக்னேஷ் என்பவரை தனக்கு தெரியாது என்றும், சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் பகல் ஒரு மணி அளவில் தான் தன்னுடைய வீட்டில் இருந்தேன் என்றும், தங்கள் வீட்டிற்கு பக்கத்தில் பச்சையம்மன் கோவில் இருக்கிறது என்றும், தன்னுடைய பேரன் மற்றும் இரண்டு சிறுவர்கள் அங்கு செல்போன் வைத்து விளையாடிக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது அண்டம்பள்ளத்தில் இருந்து இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்கள் தன் பேரனினுடைய செல்போனை பிடிங்கி கொண்டு சென்றுவிட்டதாக தன் பேரன் தன்னை கூப்பிட்டு சொன்னார் என்றும், மேற்படி செல்போன் பறித்த நபர்கள் வலசை நோக்கி சென்றுவிட்டார்கள் என்றும், சாட்சி லக்ஷ்மி என்பவரும் என்னிடம் தகவல் சொன்னார் என்றும், செல்போன் பிடிங்கி சென்ற நபர்களை தான் பார்க்கவில்லை என்றும், வேறு



K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:46:55 +0530

விவரங்கள் தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.6)** அ.சா.6 மற்றும் அ.சா.7 தங்களது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், தங்களுக்கு இவ்வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளனர்.

**5.7)** பார்வை மகசர் சாட்சியான அ.சா.8 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும், பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 என்றும், மேற்சொன்ன கையெழுத்தை தான் எதற்காக செய்தேன் என்று தெரியாது என்றும், போலிசார் தன்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.8)** ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான அ.சா.9 மற்றும் அ.சா.10 தங்களுடைய சாட்சியத்தில், ஆஜர் எதிரியை தங்களுக்கு தெரியாது என்றும், தங்களிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பம் தங்களுடையது என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதால் மேற்படி கையொப்பங்களை காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தோம் என்றும், எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று தெரியாது என்றும்

K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:47:02 +0530

போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளனர்.

**5.9)** கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.11 திரு.சதீஷ்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில், தான் தற்போது வெறையூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.கிருபானந்தன் மற்றும் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் திருமதி.ராஜலட்சுமி ஆகியோர்கள் பணி மாறுதல் பெற்று வேறு காவல் நிலையம் சென்றுவிட்டதாலும், பிரதான சாட்சிகள் அரசு தரப்பை அனுசரித்து சாட்சியம் அளிக்காத காரணத்தினாலும், கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 14.01.2021ந் தேதியன்று பகல் 02.00 மணிக்கு வெறையூர் காவல் நிலையை உதவி ஆய்வாளர் திரு.கிருபானந்தன் அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது ஆண்டியாபாளையம் கிராமத்தை சேர்ந்த தானாகவுண்டர் மகன் குமாரசாமி வயது–32 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.12/2021 இ.த.ச.பிரிவுகள் 392ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 என்றும், பின்னர், வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திருமதி.ராஜலட்சுமி அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், பின்னர், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் திருமதி.ராஜலட்சுமி 14.01.2021ந் தேதியன்று மதியம் 03.00 மணிக்கு சம்பவ இடம் சென்று


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:47:10 +0530

சாட்சிகள் பூமிபாலன் மற்றும் பிச்சைக்காரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர், மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பார்வை மகசர் அ.சா.ஆ.8 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 என்றும், பின்னர், சாட்சிகள் குமாரசாமி, திலக், பிரவீன்குமார், தரணிகுமார், பழனி, லட்சுமி, குமார், வேங்கை, செந்தில், பரத், பூமிபாலன், பிச்சைக்காரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால், 14.01.2021ந் தேதியன்று மதியம் 03.45 மணிக்கு வெறையூர் காவல் நிலைய குற்ற எண்.12/2021 வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை T.வலசை பாவாடை மகன் குமார் என்பவரின் நிலத்திடம் பொதுமக்களால் பிடித்து வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் படி அங்கு சென்று அங்கிருந்த எதிரி விக்னேஷ் அவர்களை குற்ற காரணம் கூறி கைது செய்து மற்றும் அவருடன் இருந்த இளஞ்சிறார்கள் சிவக்குமார் மற்றும் விக்னேஷ்வரன் ஆகியோர்களை கையகப்படுத்தி எதிரி மற்றும் இளஞ்சிறார்கள் தாமாக முன்வந்து சாட்சிகள் பாலு மற்றும் குமார் ஆகியோர்கள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரி விக்னேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் எடுத்து ஆஜர் செய்த நீலக்கலர் சாம்சங் செல்போன், கருநீலக்கலர் Infinite செல்போன் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார் என்றும், எதிரி விக்னேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 என்றும், கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.11 என்றும், பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம்–91ன் மூலம் நீதிமன்றத்தில்


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:47:17 +0530

ஒப்படைத்துள்ளார் என்றும், படிவம்–91 அ.சா.ஆ.12 என்றும், இளஞ்சிறார் விக்னேஷ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் மேற்சொன்ன சாட்சிகள் முன்பு பதிவு செய்துள்ளார் என்றும், இளஞ்சிறார் விக்னேஷ்வரன் எடுத்து ஆஜர் செய்த நீலக்கலர் Vivo செல்போனை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார் என்றும், பின்னர், கைப்பற்றிய மேற்படி நீலக்கலர் Vivo செல்போனை படிவம்–91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றும், படிவம்–91 அ.சா.ஆ.13 என்றும், இளஞ்சிறார் சிவக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் மேற்சொன்ன சாட்சிகள் முன்பு பதிவு செய்துள்ளார் என்றும், இளஞ்சிறார் சிவக்குமார் எடுத்து ஆஜர் செய்த TN 10 AH 9480 என்ற பதிவெண் கொண்ட கருப்பு கலர் Pulsar இருசக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார் என்றும், பின்னர், கைப்பற்றிய மேற்படி இருசக்கர வாகனத்தை படிவம்–91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்றும், படிவம்–91 அ.சா.ஆ.14 என்றும், TN 10 AH 9480 என்ற பதிவெண் கொண்ட கருப்பு கலர் Pulsar இருசக்கர வாகனம் சா.பொ.4 என்றும், பின்னர், புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:47:23 +0530

7. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் அரசுத் தரப்பு வழக்கை ஆதரிக்காமால் பிறழ்சாட்சியம் அளித்திருந்தாலும், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.11 சாட்சியத்தின் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென்றும் வாதிட்டார்.

8. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் முக்கிய சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் அரசுத் தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

**10. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரியின் மீது இ.த.ச பிரிவு 392 ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**11. <u>தீர்வு</u>**

**11.1)** எதிரியின் மீதான குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு,


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:47:33 +0530

அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, சாபொ.1 முதல் சா.பொ.4 வரையிலான சான்றுப்பொருட்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**11.2)** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் சம்பவம் பற்றி கேள்விப்பட்டது குறித்தும், பின்னர், காவல் நிலையம் சென்று புகார் அளித்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளிடம் இருந்து செல்போன்களை எதிரியும், அவருடன் இருசக்கர வாகனத்தில் வந்த இளம்சிறார்களும் கொள்ளையடித்து சென்றதாக முன்னிடப்பட்டுள்ளது. எனவே, அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார்களா என்று பரிசீலிக்க வேண்டியுள்ளது. அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் வந்தார்கள் என்றும், அந்த மூன்று நபர்களில் ஒருவர் தங்களது செல்போனை பிடுங்கி கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும், அந்த மோட்டர் சைக்கிளின் பதிவு எண் தெரியாது என்றும், செல்போன் பிடுங்கி சென்றவரின் முகம் மறந்துவிட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரி தான் செல்போன்களை கொள்ளையடித்து சென்றார் என்று எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 தனது சாட்சியத்தில், செல்போனை பிடிங்கிய நபர்களை தான் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5 எதிரியை அடையாளப்படுத்தி தெளிவான சாட்சியத்தை முன்வைக்கவில்லை.


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:47:43 +0530

அ.சா.6 மற்றும் அ.சா.7 தங்களது சாட்சியத்தில், இவ்வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். பார்வை மகசர் சாட்சியான அ.சா.8 தனது சாட்சியத்தில், போலிசார் தன்னிடம் வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். கைப்பற்றுதல் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகளான அ.சா.9 மற்றும் அ.சா.10 தங்களது சாட்சியத்தில், போலிசார் கேட்டுக்கொண்டதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பங்கள் செய்து கொடுத்ததாகவும், எதற்காக வாங்கினார்கள் என்று தெரியாது என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.2 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில், எதிரியை அடையாளப்படுத்தாததாலும், எதிரி தான் செல்போன்களை கொள்ளையடித்து சென்றார் என்று தெளிவான சாட்சியத்தை முன்வைக்காததாலும் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.11 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது.

**11.3)** அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தபோதிலும் எதிரியை குற்றப்படுத்தும் விதமாக எந்த சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. எதிரிக்கு எதிராக கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.11 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சதீஷ்குமார் அவர்கள் மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். புகார் அளித்த புகார்தாரரே புகாரினை வலியுறுத்தி சாட்சியம் அளிக்காததாலும், அ.சா.2 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சியம் அளித்துள்ளதாலும் அரசு தரப்பு வழக்கு


K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:47:51 +0530

வலுவிழந்துவிட்டது. எதிரியின் மீது சாட்டப்படும் ஒவ்வொரு குற்றசாட்டும் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும். இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 புகாரினை வலியுறுத்தி சாட்சியம் அளிக்காததாலும், அ.சா.2 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் பிறழ்சாட்சியம் அளித்துள்ளதாலும் எதிரி சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவராகிறார். எனவே, எதிரி கடந்த 14.01.2021 ஆம் தேதியன்று 13.00 மணியளவில் ஆண்டியார்பாளையம் கிராமம், பச்சையம்மன் கோயில் முன்பு அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகளிடம் இருந்து செல்போன்களை கொள்ளையடித்து சென்றதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, இவ்வழக்கின் எதிரியின் மீது இ.த.ச பிரிவு 392 ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரி இ.த.ச பிரிவு 392 ன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இவ்வழக்கில் சி.பி.எண்.22/2021ல் கண்டுள்ள வழக்கு சொத்தான நீலக்கலர் VIVO Cell Phone சா.பொ.1 மற்றும் சி.பி.எண்.21/2021 ல் கண்டுள்ள கரு நீல கலர் INFINIX Cell phone சா.பொ.3 ஆகியவற்றை அதன் உரிமையாளர் இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொள்ள Crmp.No.1028/2021 மற்றும் Crmp.No.1029/2021 ஆகியவற்றில் உத்தரவு

K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:48:00 +0530

பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுநாள் வரை மேற்படி வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் ஜாமின்தாரர்களை முன் நிறுத்தவில்லை. எனவே, வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் கு.வி.மு.ச பிரிவு 452ன் கீழ் மனு தாக்கல் செய்து வழக்கு சொத்துக்களை பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

சி.பி.எண்.21/2021 ல் கண்டுள்ள வழக்கு சொத்தான நீலக்கலர் Samsung Cell Phone சா.பொ.2 மற்றும் சி.பி.எண்.20/2021 ல் கண்டுள்ள வழக்கு சொத்தான TN 10 AH 9480 என்ற பதிவெண் கொண்ட கருப்பு கலர் Pulsar இருசக்கர வாகனம் சா.பொ.4 ஆகியவற்றை அதன் உரிமையாளர்கள் உரிய மனு செய்து பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு இரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ம் நாள் இத்திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K REVATHI
Digitally signed by K REVATHI
Date: 2026.03.17 17:48:09 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
திருவண்ணாமலை.

**அரசுத் தரப்பு சாட்சிகள்**

அ.சா.1. திரு.குமாரசாமி

அ.சா.2 திரு.திலக்

அ.சா.3 திரு.பிரவீன்குமார்

அ.சா.4 திரு.தரணிகுமார்

அ.சா.5 திரு.பழனி

அ.சா.6 திரு.வேங்கை (எ) வேங்கைதுரை

அ.சா.7 திரு.பரத்

அ.சா.8 திரு.பூமிபாலன்

அ.சா.9 திரு.பாலு

அ.சா.10 திரு.குமார்

அ.சா.11 திரு.சதீஷ் குமார் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**

அ.சா.ஆ.1 புகார் மனு

அ.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.3 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம்

அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம்

அ.சா.ஆ.5 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம்

அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம்

அ.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.8 பார்வை மகசர்

அ.சா.ஆ.9 மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.10 எதிரி விக்னேஷ் கொடுத்த ஒப்புதல் வாக்மூலத்தின்
அனுமதிக்கப்பட்ட பகுதி

அ.சா.ஆ.11 கைப்பற்றுதல் மகசர்

அ.சா.ஆ.12 படிவம் – 91

அ.சா.ஆ.13 படிவம் – 91

அ.சா.ஆ.14 படிவம் – 91

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:**

1. நீலக்கலர் VIVO Cell Phone – சா.பொ.1

2. நீலக்கலர் Samsung Cell Phone – சா.பொ.2

3. கரு நீல கலர் INFINIX Cell phone – சா.பொ.3

4. TN 10 AH 9480 என்ற பதிவெண் கொண்ட கருப்பு கலர் Pulsar இருசக்கர வாகனம் – சா.பொ.4

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் –** இல்லை.

K REVATHI Digitally signed by K REVATHI Date: 2026.03.17 17:48:20 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
திருவண்ணாமலை.

**குறிப்பு**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.